யானைக்கால் நோய்

* 232 வினா—திரு. ப. மாணிக்கம் (திரு. எம். சி. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருச்செந்தூர் வட்டாரத்தில், யானைக்கால் நோய் பரவுவது, அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

நெசவாளர்களுக்கு சுழல் நிதி

* 233 வினா—திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி—நெசவாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

நெசவாளர்களுக்கு உடனடியாகக் கடன் தொகை வழங்குவதற்கு, "சுழல் நிதி" ஒன்றை துவங்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மேற்கண்ட பொருள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தை தமிழ்நாட்டில் அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தி மத்திய அரசின் கூடுதல் வளர்ச்சி ஆணையர் (கைத்தறி) அவர்களுக்கு தமது கருத்துக்களை மாநில கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் தெரிவித்துள்ளார். மத்திய அரசு எடுக்கும் முடிவினை மாநில அரசு எதிர்பார்க்கிறது.

(முற்பகல் 10-10)

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாநில அரசு மத்திய அரசைக் கேட்டிருப்பதாகக் கூறினார்கள். அவ்வாறு அவர்களிடமிருந்து வருவதற்குக் காலதாமதமானால், இடைக்கால உதவியாக (இன்டெரிம் பிரியட்டில்) மாநில அரசு இந் நிதியை வேறு ஏதாவது நிதி மூலமாக வழங்க இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மாநில அரசிடம் அப்படிச் செய்ய உத்தேசம் இல்லை.